IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

CASE NO: SC.23/2023

DEPOSITION OF WITNESS: PW1

எதிரிகள் ஆஜர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | ராஜேந்திரன் | | | |
| Father's/Husband's Name<br>தந்தை /கணவர் | : | சுந்தரவடிவேல் | Calling/<br>தொழில் | : | |
| Village/கிராமம் | : | பெரியகொரக்கொட்டை | | | |
| Taluk/தாலுகா | : | வந்தவாசி | Age/வயது | : | 42 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 24th day of February 2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. சுமார் 7 வருடங்களுக்கு முன்பு இரவு 8 மணியளவில் சண்டை நடந்தது. கும்பலாக இருந்தது. யார் என்னை அடித்தார்கள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. எனக்கு தலையில் அடிப்பட்டது. நான் சிகிச்சைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகாரில் உள்ள விபரங்களை போலீஸார் என்னிடம் படித்து காட்டினார்கள். நான் சந்தேகத்தின் பேரில் தான் எதிரிகளின் மீது புகார் கொடுத்தேன். புகார் அ.த.சா. 1 ஆகும். என்னை எதை வைத்து அடித்தார்கள் என்று சரியாக தெரியவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளின் படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு,**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸார் விசாரணையில் கடந்த 27.06.2019 ஆம் தேதியன்று இரவு சுமார் 7.30 மணியளவில் மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள எனது தம்பி பழனி வீட்டின் திண்ணையில் நானும் எனது தம்பி பழனியும் அவரது மனைவி சரஸ்வதியுடன் பேசிக்கொண்டிருந்தபோது சுடுகாட்டிற்கு சென்றுவிட்டு அந்த வழியாக வந்த வெங்கடேசன், சங்கர், சந்துரு, சபி (எ) சதீஷ், தமிழ்செல்வன் ஆகியோர் அருகில் இருந்த கட்டை மற்றும் கருங்கற்களை எடுத்து வந்து எங்களை பார்த்து தகாத

வார்த்தைகளால் திட்டியும், வெங்கடேசன் மரக்கட்டையால் ஓங்கி எனது தலையில் அடித்தார் என்றும், சந்துருவும் என்னை கட்டையால் என்னை தலையில் தாக்கியதாகவும், நான் எனது இடது கையால் தடுத்தபோது அந்த அடி எனது இடது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும். சங்கர் கட்டையால் எனது முதுகு, வலது கால் பாதத்தின் மீது அடித்தார் என்றும் இதை தடுக்க வந்த எனது தம்பி மனைவி சரஸ்வதியை தமிழ்செல்வன் தடியால் வலது பக்க இடுப்பிலும், சபி (எ) சதீஷ் தடியால் வயிற்றிலும் அடித்தார்கள் என்றும் எங்கள் காலனியை சார்ந்த காண்டீபன், பொன்னுசாமி, நதியா ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு எங்களை வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் நான் சம்பவம் தொடர்பாக அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எதிரிகளுக்கு எதிராக புகார் அளித்தேன் என்றும் போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>
<u>இல்லை.</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2026.02.24 18:20:17 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI

CASE NO: SC.23/2023

DEPOSITION OF WITNESS: PW2

எதிரிகள் ஆஜர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | பழனி | | | |
| Father's/Husband's Name<br>தந்தை /கணவர் | : | சுந்தரவடிவேல் | Calling/<br>தொழில் | : | |
| Village/கிராமம் | : | கொரக்கொட்டை | | | |
| Taluk/தாலுகா | : | வந்தவாசி | Age/வயது | : | 36 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 24 th day of February 2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. 2019 ஆம் ஆண்டு இரவு 7 மணியளவில் சண்டை நடந்தது. யார் யாருக்கு சண்டை நடந்தது என்று தெரியவில்லை. கும்பலாக இருந்தது. எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. எனது மனைவிக்கு மட்டும் காயம் ஏற்பட்டது. அவரை யார் அடித்தார் என்று தெரியவில்லை. போலீஸார் என்னை மருத்துவமனையில் விசாரனை செய்தார்கள். எனது மனைவியை நான் சிகிச்சைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றிருந்தேன். மற்றபடி சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது.

**அரசு தரப்பு வேண்டுகோளின் படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு,**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸார் விசாரணையில் கடந்த 27.06.2019 ஆம் தேதியன்று இரவு சுமார் 7.30 மணியளவில் மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள நானும் எனது அண்ணன் ராஜேந்திரனும் என வீட்டின் திண்ணையில் நானும் எனது அண்ணன் ராஜேந்திரனும் எனது மனைவி சரஸ்வதியுடன் பேசிக்கொண்டிருந்தபோது சுடுகாட்டிற்கு சென்றுவிட்டு அந்த வழியாக வந்த வெங்கடேசன், சங்கர், சந்துரு, சபி (எ) சதீஷ், தமிழ்செல்வன் ஆகியோர் அருகில் இருந்த கட்டை மற்றும் கருங்கற்களை எடுத்து வந்து எங்களை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியும், வெங்கடேசன் மரக்கட்டையால் ஓங்கி எனது அண்ணன் ராஜேந்திரனின் தலையில் அடித்தார் என்றும், சந்துருவும் அவரை

கட்டையால் அவர தலையில் தாக்கியதாகவும், அவர் தனது இடது கையால் தடுத்தபோது அந்த அடி அவர இடது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும். சங்கர் கட்டையால் அவரது முதுகு, வலது கால் பாதத்தின் மீது அடித்தார் என்றும் இதை தடுக்க வந்த எனது மனைவி சரஸ்வதியை தமிழ்செல்வன் தடியால் வலது பக்க இடுப்பிலும், சபி (எ) சதீஷ் தடியால் வயிற்றிலும் அடித்தார்கள் என்றும் எங்கள் காலனியை சார்ந்த காண்டீபன், பொன்னுசாமி, நதியா ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு அவர்கள வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் எனது அண்ணன் ராஜேந்திரன் சம்பவம் தொடர்பாக அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எதிரிகளுக்கு எதிராக புகார் அளித்தார் என்றும் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் இரவு நேரத்தில் நடந்தது என்பதால் சந்தேகத்தின் பேரில் தான் எதிரிகளின் மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S Digitally signed by SARANYA S Date: 2026.02.24 18:20:27 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி

IN THE COURT OF THE SUBORDINATE COURT, VANDAVASI
CASE NO: SC.23/2023
DEPOSITION OF WITNESS: PW3
எதிரிகள் ஆஜர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name/பெயர் | : | சரஸ்வதி | | | |
| Father's/Husband's Name தந்தை /கணவர் | : | பழனி | Calling/ தொழில் | : | |
| Village/கிராமம் | : | கொரக்கொட்டை | | | |
| Taluk/தாலுகா | : | வந்தவாசி | Age/வயது | : | 34 |

The witness sworn under Oaths Act 1969 on this the day of 24th day of February 2026.

**1 முதல் 4 எதிரிகள் ஆஜர் அவர்களது வழக்கறிஞர் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். தேதி ஞாபகம் இல்லை. சுமார் 4 முதல் 5 வருடங்களுக்கு முன்பு இரவு சுமார் 8 மணியளவில் எனது ஊரில் சண்டை நடந்தது. யார் யார் இடையே சண்டை நடந்தது என்று எனக்கு தெரியவில்லை. எனக்கு அந்த சண்டையில் எனக்கு இடுப்பில் அடிப்பட்டது. இருட்டாக இருந்ததால் என்னை யார் அடித்தார்கள் என்று எனக்கு சரியாக தெரியவில்லை. நான் சிகிச்சைக்காக வந்தவாசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலீஸார் என்னை விசாரித்தார்கள். என்னை எதை வைத்து அடித்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை.

**அரசு தரப்பு வேண்டுகோளின் படி அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டு,**
**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

போலீஸார் விசாரணையில் கடந்த 27.06.2019 ஆம் தேதியன்று இரவு சுமார் 7.30 மணியளவில் மாரியம்மன் கோயில் தெருவில் உள்ள ராஜேந்திரனும் எனது கணவர் பழனியும் நானும் எனது வீட்டின் திண்ணையில் அவர்களும் நானும் பேசிக்கொண்டிருந்தபோது சுடுகாட்டிற்கு சென்றுவிட்டு அந்த வழியாக வந்த வெங்கடேசன், சங்கர், சந்துரு, சபி (எ) சதீஷ், தமிழ்செல்வன் ஆகியோர் அருகில் இருந்த கட்டை மற்றும் கருங்கற்களை எடுத்து வந்து எங்களை பார்த்து தகாத வார்த்தைகளால் திட்டியும், வெங்கடேசன் மரக்கட்டையால் ஓங்கி ராஜேந்திரனின் தலையில் அடித்தார் என்றும், சந்துருவும் அவரை கட்டையால்

அவரது தலையில் தாக்கியதாகவும், அவர் தனது இடது கையால் தடுத்தபோது அந்த அடி அவரது இடது கை மணிக்கட்டில் பட்டு காயம் ஏற்பட்டது என்றும். சங்கர் கட்டையால் அவரது முதுகு, வலது கால் பாதத்தின் மீது அடித்தார் என்றும் இதை தடுக்க வந்த என்னை தமிழ்செல்வன் தடியால் வலது பக்க இடுப்பிலும், சபி (எ) சதீஷ் தடியால் வயிற்றிலும் அடித்தார்கள் என்றும் எங்கள் காலனியை சார்ந்த காண்டீபன், பொன்னுசாமி, நதியா ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு எங்களை வந்தவாசி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும் எனது கணவரின் அண்ணன் ராஜேந்திரன் சம்பவம் தொடர்பாக அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது எதிரிகளுக்கு எதிராக புகார் அளித்தார் என்றும் போலீஸார் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் எனக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் இரவு நேரத்தில் நடந்தது என்பதால் சந்தேகத்தின் பேரில் தான் எதிரிகளின் மீது புகார் அளிக்கப்பட்டது என்றால் சரிதான்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.24 18:20:38 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி